**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

**அசல் வழக்கு எண்.** 71/2019

2025ம் ஆண்டு ஜனவரி திங்கள் 04 ம் நாள் சனிக்கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW1வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 செல்வி.S.கௌசல்யா என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | சிங்காரவேல் | **தொழில் :** | விவசாயம் |
| **தந்தை :** | வீரப்ப தேவர் | **சமயம் :** | இந்து |
| **ஊர் :** | வேப்பங்குளம் கிராமம் | **வயது** | 70 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**04.01.2025**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 2ம் வாதி ஆவேன், நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 15.04.2016 2ம் எதிர்வாதிக்கு, 1ம் எதிர்வாதி எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியிடுகிறேன். 22.01.1994ல் 1ம் வாதி வகையறா எழுதிக்கொடுத்த பவர் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியிடுகிறேன். 12.03.1995ல் 1ம் வாதியின் சகோதரி பெரியநாயகத்தம்மாள் என்பவரின் இறப்பு சான்று அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியிடுகிறேன். 29.03.2019ல் பட்டுக்கோட்டை மாவட்ட பதிவாளர்உத்தரவு அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியிடுகிறேன். 25.09.2018ன் சிட்டா நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியிடுகிறேன். 28.03.2018ல் 1ம் வாதி , என் மகன் அர்ஜீனமணிக்கு எழுதிக்கொடுத்த உயில் பத்திரம் நகல் ( பட்டுக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில்

உள்ளது ) **வா.சா.ஆ.6** ஆக குறியிடுகிறேன். என் மகன் அர்ஜீனமணி எனக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரம் அசல் **வா.சா.ஆ.7** ஆக குறியிடுகிறேன்.

**வாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின்பேரில் முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Mrs.S.Kavipriya.,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.